قُلْ اِنَّمَآ اَنَا بَشَرٌ مِّثْلُكُمْ يُوْحٰٓى اِلَيَّ اَنَّمَآ اِلٰـهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ ۚ فَمَنْ كَانَ
يَرْجُوْا لِقَآءَ رَبِّهٖ فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا وَّلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهٖٓ اَحَدًا ﴿١١٠﴾ ع ١٢ ٣

## سُوْرَةُ مَرْيَمَ مَكِّيَّةٌ وَهِيَ ثَمَانٌ وَتِسْعُوْنَ اٰيَةً وَسِتُّ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

كٓهٰيٰعٓصٓ ﴿١﴾ ذِكْرُ رَحْمَتِ رَبِّكَ عَبْدَهٗ زَكَرِيَّا ﴿٢﴾ اِذْ نَادٰى رَبَّهٗ
نِدَآءً خَفِيًّا ﴿٣﴾ قَالَ رَبِّ اِنِّيْ وَهَنَ الْعَظْمُ مِنِّيْ وَاشْتَعَلَ الرَّاْسُ
شَيْبًا وَّلَمْ اَكُنْ بِدُعَآئِكَ رَبِّ شَقِيًّا ﴿٤﴾ وَاِنِّيْ خِفْتُ الْمَوَالِيَ مِنْ
وَّرَآءِيْ وَكَانَتِ امْرَاَتِيْ عَاقِرًا فَهَبْ لِيْ مِنْ لَّدُنْكَ وَلِيًّا ﴿٥﴾ يَّرِثُنِيْ
وَيَرِثُ مِنْ اٰلِ يَعْقُوْبَ ۖ وَاجْعَلْهُ رَبِّ رَضِيًّا ﴿٦﴾ يٰزَكَرِيَّآ اِنَّا نُبَشِّرُكَ
بِغُلٰمِ ۨ اسْمُهٗ يَحْيٰى ۙ لَمْ نَجْعَلْ لَّهٗ مِنْ قَبْلُ سَمِيًّا ﴿٧﴾ قَالَ رَبِّ اَنّٰى
يَكُوْنُ لِيْ غُلٰمٌ وَّكَانَتِ امْرَاَتِيْ عَاقِرًا وَّقَدْ بَلَغْتُ مِنَ الْكِبَرِ
عِتِيًّا ﴿٨﴾ قَالَ كَذٰلِكَ ۚ قَالَ رَبُّكَ هُوَ عَلَيَّ هَيِّنٌ وَّقَدْ خَلَقْتُكَ
مِنْ قَبْلُ وَلَمْ تَكُ شَيْــًٔـا ﴿٩﴾ قَالَ رَبِّ اجْعَلْ لِّيْٓ اٰيَةً ۭ قَالَ
اٰيَتُكَ اَلَّا تُكَلِّمَ النَّاسَ ثَلٰثَ لَيَالٍ سَوِيًّا ﴿١٠﴾ فَخَرَجَ عَلٰى قَوْمِهٖ
مِنَ الْمِحْرَابِ فَاَوْحٰٓى اِلَيْهِمْ اَنْ سَبِّحُوْا بُكْرَةً وَّعَشِيًّا ﴿١١﴾

110. (நபியே!) நீர் கூறுவீராக: "நிச்சயமாக, நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன் தான்; நிச்சயமாக உங்களுடைய (வணக்கத்திற்குரிய) நாயன் ஒரே நாயன்தான் என்று எனக்கு வஹீமூலம் அறிவிக்கப்படுகிறது. ஆகவே, எவர் தன் இரட்சகனைச் சந்திக்க ஆதரவு வைக்கிறாரோ, அவர் நற்கருமங்களைச் செய்யவும்; தன் இரட்சகனின் வணக்கத்தில், அவர் எவரையும் இணையாக்க வேண்டாம்.

---

அத்தியாயம் : 19

## மர்யம்

வசனங்கள் : 98 மக்கீ ருகூஃகள் : 6

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. காஃப் ஹா யா ஐன் ஸாத்.

2. (நபியே! இது) உம்முடைய இரட்சகன் தன் அடியார் ஜகரிய்யாவுக்குப் புரிந்த அருள் பற்றி நினைவு கூர்வதாகும்.

3. அவர் தன் இரட்சகனைத் தாழ்ந்த குரலில் அழைத்(துப்பிரார்த்தித்)தபொழுது,

4. "என்னுடைய இரட்சகனே! நிச்சயமாக நான் _ என் எலும்புகள் பலவீனமடைந்துவிட்டன; என் தலையும் நரையால் இலங்குகிறது; என் இரட்சகனே! (இது வரையில்) நான் உன்னிடம் பிரார்த்தனை செய்து (கேட்டதில்) பாக்கியம் இல்லாதவனாக நான் ஆகவில்லை" என்று கூறினார்.

5. "நிச்சயமாக நான் எனக்குப் பின் என் உறவினர்க(ளின் தீமைக)ளை பயப்படுகிறேன்; என்னுடைய மனைவியோ மலடாக ஆகிவிட்டாள்; ஆகவே, உன்னிடத்திலிருந்து (எனக்குப்பின் என் காரியங்களை கவனிக்கும்) ஒருவாரிசை நீ அளிப்பாயாக!"

6. "அவர் எனக்கு( என் உடமையில் )வாரிஸாகவும் இருப்பார்; யஃகூபுடைய சந்ததிகளிலிருந்து (நபித்துவத்திற்கு) வாரிஸாகவும் இருப்பார்; என் இரட்சகனே! அவரை (உன்னால்) பொருந்திக் கொள்ளப்பட்டவராகவும் நீ ஆக்கிவைப்பாயாக" (என்று பிரார்த்தித்துக்கூறினார்).

7. (அதற்கு அல்லாஹ் அவரிடம்) "ஜகரிய்யாவே! நிச்சயமாக நாம் ஒரு மகனை (த்தருவதாக) உமக்கு நன்மாராயங் கூறுகிறோம்; அவர் பெயர் யஹ்யாவாகும். இதற்கு முன் அப்பெயரிடப்பட்ட ஒருவரையும் அதற்கு நாம் ஆக்கவில்லை" (என்று கூறினான்).

8. அ(தற்க) வர் "என் இரட்சகனே! என் மனைவியோ மலடியாக இருக்கிறாள், நானோ முதுமையின் முடிவை திட்டமாக அடைந்து விட்டேன் (இந்நிலையில்) எனக்கு எவ்வாறு ஒரு புதல்வன் உண்டாவான்?" என்று கேட்டார்.

9. "அ(தற்க)வன், அவ்வாறே (நடைபெறும்) என்று கூறினான்; இது எனக்கு மிக்க எளிதானது; இதற்கு முன்னர், நீர் ஒன்றுமில்லாமலிருந்த நிலையில் நானே உம்மைப்படைத்தேன்" என்று உமதிரட்சகன் கூறினான்.

10. அ(தற்க)வர், "என் இரட்சகனே! (இதற்கு) எனக்கோர் அத்தாட்சியை ஆக்குவாயாக! என (பிரார்த்தித்து)க்கேட்டார். அவன் "உமக்கு அத்தாட்சியாவது, நீர் சரீர சுகவாசியாக இருக்க மூன்று இரவுகள் (பகல்கள்) மனிதர்களுடன் பேச முடியாமல் இருப்பதாகும்" என்று கூறினான்.

11. பின்னர், அவர் தொழுமிடத்திலிருந்து தன் சமூகத்தினர்பால் வெளியேறி(முன் வந்து) காலையிலும் மாலையிலும் (அல்லாஹ்வைப் புகழ்ந்து) துதிசெய்யுங்கள் என்று (தன் கையால்) அவர்களுக்கு சாடையாகக் காண்பித்தார்.

يٰيَحْيٰى خُذِ الْكِتٰبَ بِقُوَّةٍ ؕ وَاٰتَيْنٰهُ الْحُكْمَ صَبِيًّا ۙ﴿۱۲﴾ وَّحَنَانًا
مِّنْ لَّدُنَّا وَزَكٰوةً ؕ وَكَانَ تَقِيًّا ۙ﴿۱۳﴾ وَّبَرًّا بِوَالِدَيْهِ وَلَمْ يَكُنْ
جَبَّارًا عَصِيًّا ﴿۱۴﴾ وَسَلٰمٌ عَلَيْهِ يَوْمَ وُلِدَ وَيَوْمَ يَمُوْتُ وَيَوْمَ
يُبْعَثُ حَيًّا ﴿۱۵﴾ وَاذْكُرْ فِي الْكِتٰبِ مَرْيَمَ ۘ اِذِ انْتَبَذَتْ مِنْ اَهْلِهَا وقف لازم ع ۱
مَكَانًا شَرْقِيًّا ۙ﴿۱۶﴾ فَاتَّخَذَتْ مِنْ دُوْنِهِمْ حِجَابًا ۫ فَاَرْسَلْنَآ
اِلَيْهَا رُوْحَنَا فَتَمَثَّلَ لَهَا بَشَرًا سَوِيًّا ﴿۱۷﴾ قَالَتْ اِنِّيْٓ اَعُوْذُ
بِالرَّحْمٰنِ مِنْكَ اِنْ كُنْتَ تَقِيًّا ﴿۱۸﴾ قَالَ اِنَّمَآ اَنَا رَسُوْلُ رَبِّكِ ۖ
لِاَهَبَ لَكِ غُلٰمًا زَكِيًّا ﴿۱۹﴾ قَالَتْ اَنّٰى يَكُوْنُ لِيْ غُلٰمٌ وَّلَمْ
يَمْسَسْنِيْ بَشَرٌ وَّلَمْ اَكُ بَغِيًّا ﴿۲۰﴾ قَالَ كَذٰلِكِ ۚ قَالَ رَبُّكِ الربع
هُوَ عَلَيَّ هَيِّنٌ ۚ وَلِنَجْعَلَهٗٓ اٰيَةً لِّلنَّاسِ وَرَحْمَةً مِّنَّا ۚ وَكَانَ
اَمْرًا مَّقْضِيًّا ﴿۲۱﴾ فَحَمَلَتْهُ فَانْتَبَذَتْ بِهٖ مَكَانًا قَصِيًّا ﴿۲۲﴾
فَاَجَآءَهَا الْمَخَاضُ اِلٰى جِذْعِ النَّخْلَةِ ۚ قَالَتْ يٰلَيْتَنِيْ مِتُّ
قَبْلَ هٰذَا وَكُنْتُ نَسْيًا مَّنْسِيًّا ﴿۲۳﴾ فَنَادٰىهَا مِنْ تَحْتِهَآ
اَلَّا تَحْزَنِيْ قَدْ جَعَلَ رَبُّكِ تَحْتَكِ سَرِيًّا ﴿۲۴﴾ وَهُزِّيْٓ
اِلَيْكِ بِجِذْعِ النَّخْلَةِ تُسٰقِطْ عَلَيْكِ رُطَبًا جَنِيًّا ۫﴿۲۵﴾

12. (நாம் வாக்களித்தவாறே யஹ்யா பிறந்த பின்னர் நாம் அவரிடம்) "யஹ்யாவே! நீர் இவ்வேதத்தை பலமாகப் பிடித்துக்கொள்வீராக!" (என்று கூறினோம்). அவர் குழந்தையாக இருந்தபோதே அவருக்கு (சட்ட) ஞானத்தையும் நாம் அளித்தோம்.

13. அன்றியும், நம்மிடமிருந்து இரக்கத்தன்மையையும், பரிசுத்தத் தன்மையையும் (நாம் அவருக்குக் கொடுத்தோம்;) இன்னும், அவர் மிக்க பயபக்தியுடையவராக இருந்தார்.
14. இன்னும் அவர், தம் பெற்றோர்க்கு நன்மை செய்பவராகவும் ( இருந்தார்); அவர் பெருமை கொண்டவராகவோ (அல்லாஹ்வுக்கு) மாறு செய்பவராகவோ இருக்கவில்லை.

15. அவர் பிறந்த நாளிலும், அவர் இறக்கும் நாளிலும், அவர் உயிர் பெற்றவராக எழுப்பப்படும் (மறுமை) நாளிலும் அவர் மீது சாந்தி உண்டாவதாக.
16. (நபியே!) இவ்வேதத்தில், மர்யமைப் பற்றியும் நினைவு கூர்வீராக! அவர் தன் குடும்பத்தினரை விட்டு கிழக்குப் பக்கமுள்ள இடத்தில் தனித்தபோது;

17. அவர் (தம்மை) அவர்களிடமிருந்து (மறைத்துக் கொள்வதற்காக) ஒரு திரையை ஆக்கிக் கொண்டார்; அப்பொழுது (ஜிப்ரீல் என்னும்) நம்முடைய ரூஹை அவரிடம் நாம் அனுப்பிவைத்தோம்; அவர் சரியான ஒரு மனிதருடைய உருவத்தில் அவருக்கு முன் தோற்றமளித்தார்.

18. (மர்யம் ஜிப்ரீலைக் கண்டதும்,) "நிச்சயமாக நான் உம்மைவிட்டும் (காக்குமாறு) ரஹ்மானிடம் பாதுகாவல் தேடுகிறேன்; நீர் பயபக்தியுடையவராக இருந்தால் (என்னிடம் நெருங்காதீர்)" என்று கூறினார்.
19. அ(தற்க)வர், "பரிசுத்தமான ஒரு மகனை (அல்லாஹ்விடமிருந்து) உமக்கு நான் நன்கொடையளிப்பதற்காக நிச்சயமாக நான் உமதிரட்சகனின் (மலக்காகிய) ஒரு தூதன் தான்" என்று கூறினார்.

20. அ(தற்க)வர், "எனக்கு எவ்வாறு புதல்வன் உண்டாக முடியும் ? (விவாகத்தின் மூலம்) எந்த ஆடவரும் என்னைத் தீண்டியதில்லையே! நான் கெட்ட நடத்தையுள்ளவளுமல்லவே" என்று கூறினார்.

21. அ(தற்க)வர், அவ்வாறே ! "அது எனக்கு எளிது; அவரை மனிதர்களுக்கு ஒரு அத்தாட்சியாகவும், நம்மிடமிருந்து ஓர் அருளாகவும் நாம் ஆக்குவதற்காக (நாம் அவரை உண்டாக்கினோம்) என்றும், இது விதிக்கப்பட்டுவிட்ட ஒரு விஷயம் என்றும் உமதிரட்சகனே கூறுகிறான்" என்று கூறினார்.

22. பின்னர், அவர் (மர்யம், ஈஸாவாகிய) அவரைக்கருவுற்றார். பின்னர், அ(க் கர்ப்ப)த்துடன் தூரமான ஓர் இடத்திற்கு ஒதுங்கிச் சென்றடைந்தார்.

23. பின்பு (அவருக்கு ஏற்பட்ட) பிரசவவேதனை, ஒரு பேரீச்ச மரத்தின் (காய்ந்த) அடி பாகத்தின் பால் அவரைக் கொண்டுவந்து சேர்த்தது; "இதற்கு முன்னதாகவே நான் இறந்து முற்றிலும் மறக்கடிக்கப்பட்டவளாக நான் ஆகியிருக்கவேண்டுமே" என்று (மர்யம்) கூறினார்.

24. அப்போது, அவருக்குக் கீழ் புறமிருந்து (ஜிப்ரீயிலாகிய) அவர் சப்தமிட்டு அவரை அழைத்து, "(மர்யமே!) நீர் கவலைப்படாதீர்! உம(து பாதத்து)க்கு கீழாக உமதிரட்சகன் ஓர் ஊற்றை திட்டமாக ஆக்கியிருக்கின்றான்" (என்றும்),
25. மேலும், " இப்பேரீச்ச மரத்தின் அடிப்பாகத்தை நீர் உம்பக்கம் (இழுத்துக்) குலுக்குவீராக! அது பழுத்த பழங்களை உம் மீது சொரியும்" (என்றும்),

فَكُلِىْ وَاشْرَبِىْ وَقَرِّىْ عَيْنًا ۚ فَاِمَّا تَرَيِنَّ مِنَ الْبَشَرِ اَحَدًا ۙ
فَقُوْلِىْۤ اِنِّىْ نَذَرْتُ لِلرَّحْمٰنِ صَوْمًا فَلَنْ اُكَلِّمَ الْيَوْمَ اِنْسِيًّا ۚ ﴿۲۶﴾
فَاَتَتْ بِهٖ قَوْمَهَا تَحْمِلُهٗ ؕ قَالُوْا يٰمَرْيَمُ لَقَدْ جِئْتِ شَيْـًٔا فَرِيًّا ﴿۲۷﴾
يٰۤاُخْتَ هٰرُوْنَ مَا كَانَ اَبُوْكِ امْرَاَ سَوْءٍ وَّمَا كَانَتْ اُمُّكِ بَغِيًّا ۚۖ ﴿۲۸﴾
فَاَشَارَتْ اِلَيْهِ ؕ قَالُوْا كَيْفَ نُكَلِّمُ مَنْ كَانَ فِى الْمَهْدِ صَبِيًّا ﴿۲۹﴾
قَالَ اِنِّىْ عَبْدُ اللّٰهِ ؕ اٰتٰنِىَ الْكِتٰبَ وَجَعَلَنِىْ نَبِيًّا ۙ ﴿۳۰﴾ وَّجَعَلَنِىْ
مُبٰرَكًا اَيْنَ مَا كُنْتُ وَاَوْصٰنِىْ بِالصَّلٰوةِ وَالزَّكٰوةِ مَا دُمْتُ
حَيًّا ۖ ﴿۳۱﴾ وَّبَرًّاۢ بِوَالِدَتِىْ وَلَمْ يَجْعَلْنِىْ جَبَّارًا شَقِيًّا ﴿۳۲﴾ وَالسَّلٰمُ
عَلَىَّ يَوْمَ وُلِدْتُّ وَيَوْمَ اَمُوْتُ وَيَوْمَ اُبْعَثُ حَيًّا ﴿۳۳﴾ ذٰلِكَ
عِيْسَى ابْنُ مَرْيَمَ ۚ قَوْلَ الْحَقِّ الَّذِىْ فِيْهِ يَمْتَرُوْنَ ﴿۳۴﴾ مَا كَانَ
لِلّٰهِ اَنْ يَّتَّخِذَ مِنْ وَّلَدٍ ۙ سُبْحٰنَهٗ ؕ اِذَا قَضٰۤى اَمْرًا فَاِنَّمَا يَقُوْلُ
لَهٗ كُنْ فَيَكُوْنُ ؕ ﴿۳۵﴾ وَاِنَّ اللّٰهَ رَبِّىْ وَرَبُّكُمْ فَاعْبُدُوْهُ ؕ هٰذَا
صِرَاطٌ مُّسْتَقِيْمٌ ﴿۳۶﴾ فَاخْتَلَفَ الْاَحْزَابُ مِنْۢ بَيْنِهِمْ ۚ فَوَيْلٌ
لِّلَّذِيْنَ كَفَرُوْا مِنْ مَّشْهَدِ يَوْمٍ عَظِيْمٍ ﴿۳۷﴾ اَسْمِعْ بِهِمْ وَاَبْصِرْ ۙ
يَوْمَ يَاْتُوْنَنَا لٰكِنِ الظّٰلِمُوْنَ الْيَوْمَ فِىْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۳۸﴾

26. "அப்போது, (அப்பழங்களை) நீர் உண்பீராக! இன்னும், (ஊற்றின் நீரைக்) குடித்துக்கொள்வீராக! (இக்குழந்தையினால் உம்) கண் குளிர்ந்துமிருப்பீராக! பின்னர், மனிதர்களில் எவரையேனும் நிச்சயமாக நீர் கண்டால், நான் அர்ரஹ்மானுக்கு நோன்பை நேர்ச்சை செய்திருக்கின்றேன்; ஆகவே, இன்றையத் தினம் எந்தமனிதருடனும் நான் பேசவே மாட்டேன் என்று (சைகை மூலம்) கூறிவிடுவீராக!" (என்றும் கூறினார்.)

27. (அக்குழந்தையைப் பிரசவித்த) பின்னர், அவர் (மர்யம்) அதைச் சுமந்து கொண்டு தன் சமூகத்தாரிடம் வந்தார்; அவர்கள் (இவரை நோக்கி,) " மர்யமே! நிச்சயமாக மறுக்கப்பட்ட (இழிவான ஒரு பெருங்) காரியத்தை நீர் கொண்டுவந்து விட்டீர்" என்று கூறினார்கள்.

28. "ஹாரூனுடைய சகோதரியே! உன் தந்தை கெட்டமனிதராக இருக்கவில்லை(யே)! உன் தாயும் நடத்தை கெட்டவராக இருக்கவில்லை" என்று (நிந்தித்துக்) கூறினார்கள்.

29. ( இதைப்பற்றித் தன் குழந்தையிடமே கேட்குமாறு மர்யமாகிய) அவர் அதன் பக்கம் சுட்டிக் காண்பித்தார்; அ(தற்க)வர்கள், " மடியில் குழந்தையாக இருப்பவரிடம் நாங்கள் எவ்வாறு பேசுவோம்?" என்று கூறினார்கள்.

30. (அப்பொழுது அவர்களிடம்) "நிச்சயமாக நான், அல்லாஹ்வுடைய அடியான்; அவன் எனக்கு ஒரு வேதத்தைக் கொடுத்து நபியாகவும் என்னை அவன் ஆக்கி இருக்கிறான்" என்று (அக்குழந்தை) கூறியது.

31. "நான் எங்கிருந்த போதிலும், அவன் என்னை (மிக்க) பரக்கத்துச் செய்யப்பட்டவனாகவும் ஆக்கியிருக்கிறான்; நான் ஜீவித்திருக்கும் காலமெல்லாம் தொழுகையை (நிறைவேற்றுவது) க்கொண்டும், ஜகாத்தைக் (கொடுத்துவருவது) கொண்டும் அவன் எனக்கு உபதேசம் செய்திருக்கிறான்.

32. "இன்னும், என்னுடைய தாயாருக்கு நான் நன்றி செய்பவனாகவும், (என்னை ஆக்கினான்.) பெருமைக்காரனாக(வோ), துர்ப்பாக்கிய முள்ளவனாக(வோ) அவன் என்னை ஆக்கவில்லை.

33. "நான் பிறந்த நாளிலும், நான் இறக்கும் நாளிலும் (மறுமையில்) நான் உயிர்பெற்றவனாக எழுப்பப்படும் நாளிலும், (அல்லாஹ்வின்) சாந்தி என் மீது உண்டாவதாக" (என்றும் கூறியது).

34. அவர்தான் மர்யமுடைய மகன் ஈஸா (ஆவார்); எதில் அவர்கள் (சந்தேகித்து) தர்க்கித்துக் கொண்டிருக்கிறார்களோ, அது பற்றிய உண்மையான சொல் இதுதான்.

35. அல்லாஹ்விற்கு — எந்த ஒரு புதல்வனையும் —அவன் எடுத்துக் கொள்ள வேண்டியது (அவசியம்) இல்லை; அவன் மிகப் பரிசுத்தமானவன்; அவன் ஒருகாரியத்தை முடிவு செய்தால், அவன் அதற்குச் சொல்லுவதெல்லாம் "ஆகுக"! என்பதுதான். (உடனே) அது ஆகிவிடும்.

36. (மனிதர்களே!)" நிச்சயமாக அல்லாஹ்தான் என்னுடைய இரட்சகனும், உங்களின் இரட்சகனுமாவான்; (ஈஸாவாகிய நானல்ல;) ஆகவே, அ(வன் ஒரு)வனையே நீங்கள் வணங்குங்கள்; இதுதான் நேரான வழி" (என்று ஈஸா கூறினார்).

37. ஆனால் , அவர்களிலுள்ள (பல்வேறுகருத்துக்கொண்ட) கூட்டத்தார்கள் (இதைப்பற்றி) தங்களுக்கிடையே கருத்துவேறுபாடு கொண்டனர் ;ஆகவே ( நாம் கூறிய இதனை) நிராகரிப்போருக்கு மகத்தான (மறுமை) நாளின் (பெரும்) காட்சியை காணுமிடத்தில் கேடுதான் (உண்டு).

38. நம்மிடம் அவர்கள் வரும் (மறுமை) நாளில் அவர்களைக் கேட்கச்செய்ததும், பார்க்கச்செய்ததும் எது? (நன்றாகக் கேட்கவும், பார்க்கவும் செய்வார்கள்.) எனினும், அந்த அநியாயக்காரர்கள் இன்றையத்தினம் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்.

وَأَنْذِرْهُمْ يَوْمَ الْحَسْرَةِ إِذْ قُضِيَ الْأَمْرُ وَهُمْ فِي غَفْلَةٍ وَهُمْ وقف لازم
لَا يُؤْمِنُونَ ﴿٣٩﴾ إِنَّا نَحْنُ نَرِثُ الْأَرْضَ وَمَنْ عَلَيْهَا وَإِلَيْنَا
يُرْجَعُونَ ﴿٤٠﴾ ع وَاذْكُرْ فِي الْكِتٰبِ إِبْرٰهِيمَ ۚ إِنَّهُ كَانَ صِدِّيقًا ع ٥ ٢
نَبِيًّا ﴿٤١﴾ إِذْ قَالَ لِأَبِيهِ يٰأَبَتِ لِمَ تَعْبُدُ مَا لَا يَسْمَعُ وَلَا يُبْصِرُ وَ
لَا يُغْنِي عَنْكَ شَيْئًا ﴿٤٢﴾ يٰأَبَتِ إِنِّي قَدْ جَاءَنِي مِنَ الْعِلْمِ مَا لَمْ
يَأْتِكَ فَاتَّبِعْنِي أَهْدِكَ صِرَاطًا سَوِيًّا ﴿٤٣﴾ يٰأَبَتِ لَا تَعْبُدِ الشَّيْطٰنَ ط
إِنَّ الشَّيْطٰنَ كَانَ لِلرَّحْمٰنِ عَصِيًّا ﴿٤٤﴾ يٰأَبَتِ إِنِّي أَخَافُ أَنْ
يَمَسَّكَ عَذَابٌ مِنَ الرَّحْمٰنِ فَتَكُونَ لِلشَّيْطٰنِ وَلِيًّا ﴿٤٥﴾ قَالَ أَرَاغِبٌ
أَنْتَ عَنْ آلِهَتِي يٰإِبْرٰهِيمُ ۚ لَئِنْ لَمْ تَنْتَهِ لَأَرْجُمَنَّكَ وَاهْجُرْنِي مَلِيًّا ﴿٤٦﴾
قَالَ سَلٰمٌ عَلَيْكَ ۚ سَأَسْتَغْفِرُ لَكَ رَبِّي ط إِنَّهُ كَانَ بِي حَفِيًّا ﴿٤٧﴾ وَ
أَعْتَزِلُكُمْ وَمَا تَدْعُونَ مِنْ دُونِ اللّٰهِ وَأَدْعُوا رَبِّي صلے عَسٰى أَلَّا
أَكُونَ بِدُعَاءِ رَبِّي شَقِيًّا ﴿٤٨﴾ فَلَمَّا اعْتَزَلَهُمْ وَمَا يَعْبُدُونَ مِنْ
دُونِ اللّٰهِ ۙ وَهَبْنَا لَهُ إِسْحٰقَ وَيَعْقُوبَ ط وَكُلًّا جَعَلْنَا نَبِيًّا ﴿٤٩﴾
وَوَهَبْنَا لَهُمْ مِنْ رَحْمَتِنَا وَجَعَلْنَا لَهُمْ لِسَانَ صِدْقٍ عَلِيًّا ﴿٥٠﴾ ع ع ٣ ٦ ٢
وَاذْكُرْ فِي الْكِتٰبِ مُوسٰى ۚ إِنَّهُ كَانَ مُخْلَصًا وَكَانَ رَسُولًا نَبِيًّا ﴿٥١﴾

39. மேலும் (நபியே! நியாயத் தீர்ப்பளிக்கப்பட்டு)காரியம் முடிக்கப் பட்டுவிடும்போது மிக்க கைசேதமான (அந்த) நாளைப்பற்றி நீர் அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக! இன்னும், (இன்றையத் தினம்) அவர்கள் (அதுபற்றி) மறதியில் இருக்கிறார்கள்; அவர்களோ விசுவாசங் கொள்ள மாட்டார்கள்.

40. நிச்சயமாக, நாமே பூமியையும், அதன் மீதிருப்பவர்களையும் வாரிசாக்கி (அனந்தரமாக்கி)க் கொள்வோம்; அவர்கள் (யாவரும்) நம்மிடமே மீட்க(ப்பட்டுக் கொண்டுவர)ப்படுவார்கள்.

41. மேலும், (நபியே!) இவ்வேதத்தில், இப்றாஹீமை(ப் பற்றி) நினைவு கூர்வீராக! நிச்சயமாக அவர் மிக்க உண்மையாளராக, நபியாக இருந்தார்.

42. அவர் தன் தந்தையிடம், "என் தந்தையே! எதையும் செவியேற்காத, மற்றும் (எதையும்) பார்க்காத, (நன்மையை ஈர்த்தும், தீமையைத்தடுத்தும்) உம்மைவிட்டும் எதையும் தடுக்காததை நீர் ஏன் வணங்குகிறீர்?" என்று கூறியதை (நபியே!நினைவு கூர்வீராக! அப்போது)

43. "என் தந்தையே! நிச்சயமாக நான்_என்னிடம் அறிவிலிருந்து உமக்கு வந்திராதது திட்டமாக வந்திருக்கிறது; ஆகவே நீர்என்னைப் பின்பற்றுவீராக! (அப்பொழுது) நான் உமக்கு செவ்வையான வழியைக் காட்டுவேன்(என்றும்),

44. "என் தந்தையே! ஷைத்தானை நீர் வணங்காதீர்; நிச்சயமாக ஷைத்தான் மிகக்கிருபையுடையோ(னாகிய ரஹ்மா)னுக்கு மாறு செய்பவனாக இருக்கிறான்(என்றும்),

45. "என் தந்தையே! மிகக்கிருபையுடையவனிலிருந்து வேதனை உம்மைப் பிடித்து (அதனால்) ஷைத்தானுக்கு நீர் சினேகிதராகிவிடுவதை நிச்சயமாக நான் பயப்படுகிறேன்"(என்றும் கூறியபோது),

46. (அதற்கு) அவர்(தந்தை)," இப்றாஹீமே! நீர் என்னுடைய (வணக்கத்திற்குரிய) தெய்வங்களைப் புறக்கணிக்கின்றீரா? நீர் இ(வ்வெண்ணத்)திலிருந்து விலகிக்கொள்ளாவிடில் உம்மைக்கல்லால் எறி(ந்து கொல்)வேன்; (இனி) நீர் என்னை விட்டு நெடுங்காலத்திற்கு விலகிப் போய்விடும்," என்று கூறினார்.

47.(அதற்கு இப்றாஹீம்)"உம்மீது சாந்தி உண்டாவதாக!(பின்னர்,)நான் உமக்காக என் இரட்சகனிடத்தில் பாவமன்னிப்புக் கோருவேன்; நிச்சயமாக அவன் என்னுடன் இரக்கமுடையோனாக இருக்கிறான்" என்று கூறினார்.

48. "உங்களையும், அல்லாஹ்வையன்றி நீங்கள் (தெய்வமென) அழைப்பவைகளையும் விட்டு நான் விலகிக்கொள்கிறேன்; என் இரட்சகனையே நான் பிரார்த்தித்துக் கொண்டிருப்பேன்;என் இரட்சகனைப் பிரார்த்திப்பது கொண்டு நான் துர்ப்பாக்கியமுடையவனாக ஆகாமல் இருக்கப்போதும் (என்றும் கூறினார்).

49. பின்னர் அவர், அவர்களையும், அல்லாஹ்வையன்றி அவர்கள் வணங்கிக் கொண்டிருந்தவற்றையும் விட்டு விலகிக் கொண்ட போது, இஸ்ஹாக்கையும், யஃகூபையும் அவருக்கு(ச்சந்ததிகளாக) நாம் அன்பளிப்பாக அளித்தோம்.; அவர்கள் ஒவ்வொருவரையும் நபியாக நாம் ஆக்கினோம்.

50. இன்னும், அவர்களுக்கு நம் அருளிலிருந்து அன்பளிப்பாகக் கொடுத்தோம்; (எல்லாச் சமூகத்தாரிடத்தும்) உயர்வான நற்பெயரையும் நாம் அவர்களுக்கு ஆக்கினோம்.

51. மேலும், இவ்வேதத்தில் மூஸாவைப்பற்றி (நபியே!) நினைவு கூர்வீராக! நிச்சயமாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருந்தார்; இன்னும், அவர் (நம்முடைய) தூதராக, நபியாக இருந்தார்.

وَنَادَيْنٰهُ مِنْ جَانِبِ الطُّوْرِ الْاَيْمَنِ وَقَرَّبْنٰهُ نَجِيًّا ﴿٥٢﴾ وَ
وَهَبْنَا لَهٗ مِنْ رَّحْمَتِنَاۤ اَخَاهُ هٰرُوْنَ نَبِيًّا ﴿٥٣﴾ وَاذْكُرْ فِي الْكِتٰبِ
اِسْمٰعِيْلَ اِنَّهٗ كَانَ صَادِقَ الْوَعْدِ وَكَانَ رَسُوْلًا نَّبِيًّا ﴿٥٤﴾ وَ
كَانَ يَاْمُرُ اَهْلَهٗ بِالصَّلٰوةِ وَالزَّكٰوةِ وَكَانَ عِنْدَ رَبِّهٖ مَرْضِيًّا ﴿٥٥﴾
وَاذْكُرْ فِي الْكِتٰبِ اِدْرِيْسَ اِنَّهٗ كَانَ صِدِّيْقًا نَّبِيًّا ﴿٥٦﴾ وَّرَفَعْنٰهُ
مَكَانًا عَلِيًّا ﴿٥٧﴾ اُولٰٓئِكَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ مِّنَ النَّبِيّٖنَ
مِنْ ذُرِّيَّةِ اٰدَمَ وَمِمَّنْ حَمَلْنَا مَعَ نُوْحٍ وَّمِنْ ذُرِّيَّةِ اِبْرٰهِيْمَ
وَاِسْرَآءِيْلَ وَمِمَّنْ هَدَيْنَا وَاجْتَبَيْنَا اِذَا تُتْلٰى عَلَيْهِمْ اٰيٰتُ
الرَّحْمٰنِ خَرُّوْا سُجَّدًا وَّبُكِيًّا ﴿٥٨﴾ فَخَلَفَ مِنْ بَعْدِهِمْ خَلْفٌ السجدة
اَضَاعُوا الصَّلٰوةَ وَاتَّبَعُوا الشَّهَوٰتِ فَسَوْفَ يَلْقَوْنَ غَيًّا ﴿٥٩﴾
اِلَّا مَنْ تَابَ وَاٰمَنَ وَعَمِلَ صَالِحًا فَاُولٰٓئِكَ يَدْخُلُوْنَ
الْجَنَّةَ وَلَا يُظْلَمُوْنَ شَيْـًٔا ﴿٦٠﴾ جَنّٰتِ عَدْنِ ِۨالَّتِيْ وَعَدَ
الرَّحْمٰنُ عِبَادَهٗ بِالْغَيْبِ اِنَّهٗ كَانَ وَعْدُهٗ مَاْتِيًّا ﴿٦١﴾ لَا يَسْمَعُوْنَ
فِيْهَا لَغْوًا اِلَّا سَلٰمًا وَلَهُمْ رِزْقُهُمْ فِيْهَا بُكْرَةً وَّعَشِيًّا ﴿٦٢﴾
تِلْكَ الْجَنَّةُ الَّتِيْ نُوْرِثُ مِنْ عِبَادِنَا مَنْ كَانَ تَقِيًّا ﴿٦٣﴾

52. இன்னும் தூர்(ஸினாய்) மலையின் வலப் பக்கத்திலிருந்து அவரை நாம் கூப்பிட்டோம்; இரகசியம்பேசுகிறவராக அவரை நாம்(நமக்கு) நெருக்கமாக்கியும் வைத்தோம்.

53. மேலும், நம் அருளிலிருந்து அவருடைய சகோதரர் ஹாரூனை நபியாக அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தோம்.

54. மேலும், இவ்வேதத்தில் இஸ்மாயீலைப் பற்றி(நபியே!) நினைவு கூர்வீராக! நிச்சயமாக அவர் வாக்குறுதியில் உண்மையானவராக இருந்தார்; இன்னும் அவர், (நம்முடைய) தூதராக, நபியாக இருந்தார்.

55. இன்னும், அவர் தன் குடும்பத்தினரை, தொழுகையை (நிறைவேற்றுவது)க் கொண்டும், ஜகாத்தைக்(கொடுத்து வருவது) கொண்டும் ஏவுகிறவாராக இருந்தார்; அவர் தன் இரட்சகனிடத்தில் பொருந்திக் கொள்ளப்பட்டவராகவும் இருந்தார்.

56. மேலும், இத்ரீஸைப் பற்றி(நபியே!) இவ்வேதத்தில் நினைவு கூர்வீராக! நிச்சயமாக அவர் மிக்க உண்மையாளராக,(நம்முடைய) நபியாக இருந்தார்.
57. மேலும், அவரை மிக்க மேலான இடத்திற்கு நாம் உயர்த்திவிட்டோம்.

58. (மேற் கூறப்பட்ட) அவர்கள் எத்தகையோரென்றால், ஆதமுடைய சந்ததியிலுள்ள நபிமார்களிலிருந்தும், (நபி) நூஹ்வுடன் கப்பலில் நாம் ஏற்றிக் கொண்டவர்களி(ன் சந்ததிகளி)லிருந்தும், இப்றாஹீம், இஸ்ராயீலின் சந்ததியிலிருந்தும் நாம் நேர் வழியில் செலுத்தி, நாம் தேர்ந்தெடுத்தவர் களிலுமிருந்து (ம் உள்ளோராவர்) அவர்களின் மீது அல்லாஹ் அருள் செய்து விட்டான். அவர்கள் மீது அர்ரஹ்மானுடைய வசனங்கள் ஓதிக்காண்பிக்கப் பட்டால் (சிரம் பணிந்து) ஸுஜூது செய்தவர்களாக; மற்றும் அழுதவர்களாக விழுந்து விடுவார்கள்.

59. இவர்களுக்குப் பின்னர்,(வழிகெட்ட)தீய பின்தோன்றல்கள் இவர்களுடைய இடத்தை அடைந்தார்கள்; தொழுகையை (த் தொழாது) வீணாக்கினார்கள்; மனோ இச்சைகளையும்பின்பற்றினார்கள்; ஆகவே அவர்கள் (மறுமையில்)பெரும் தீமையைச் சந்திப்பார்கள்.

60. (ஆயினும்,) அவர்களில் எவர் (பச்சாதாபப்பட்டு) தவ்பாச் செய்து, விசுவாசமுங் கொண்டு, நற்கருமங்களையும் செய்தார்களோ அவர்களைத்தவிர; அத்தகையோர் சுவனத்தில் பிரவேசிப்பார்கள்; இன்னும் அவர்கள் ஒரு சிறிதும் அநியாயம் செய்யப்படமாட்டார்கள்.

61. "அத்னு" என்ற (நிலையான) சொர்க்கங்கள் (அவர்களுக்கு கூலியாகும்)_ அவை எத்தகையவையென்றால், ரஹ்மான் தன் (நல்) அடியார்களுக்கு(அவை) மறைவாக இருக்கும் நிலையில் வாக்களித்துள்ளான்; நிச்சயமாக அவனுடைய வாக்கு வரக்கூடியதாகவே உள்ளது.

62. அவற்றில் அவர்கள் ஸலாம் (எனும் சாந்தி) என்பதைத் தவிர (வார்த்தைகளால்வேறு) வீணானதைச் செவியேற்கமாட்டார்கள்; அவற்றில் அவர்களுக்குக்காலையிலும், மாலையிலும் (மிக்க மேலான) உணவும் உண்டு.

63. அந்தசொர்க்கம் எத்தகையதென்றால், நம் அடியார்களில் பயபக்தியுடைய வர்களுக்கு (அதை)நாம் அனந்தரமாக்கிவிடுவோம்.

وَمَا نَتَنَزَّلُ اِلَّا بِاَمۡرِ رَبِّكَ ۚ لَهٗ مَا بَيۡنَ اَيۡدِيۡنَا وَمَا خَلۡفَنَا
وَمَا بَيۡنَ ذٰلِكَ ۚ وَمَا كَانَ رَبُّكَ نَسِيًّا ﴿۶۴﴾ رَبُّ السَّمٰوٰتِ وَ
الۡاَرۡضِ وَمَا بَيۡنَهُمَا فَاعۡبُدۡهُ وَاصۡطَبِرۡ لِعِبَادَتِهٖ ؕ هَلۡ تَعۡلَمُ
لَهٗ سَمِيًّا ﴿۶۵﴾ وَيَقُوۡلُ الۡاِنۡسَانُ ءَاِذَا مَا مِتُّ لَسَوۡفَ اُخۡرَجُ حَيًّا ﴿۶۶﴾ ع ۱۵ ۴
اَوَلَا يَذۡكُرُ الۡاِنۡسَانُ اَنَّا خَلَقۡنٰهُ مِنۡ قَبۡلُ وَلَمۡ يَكُ شَيۡـًٔا ﴿۶۷﴾
فَوَرَبِّكَ لَنَحۡشُرَنَّهُمۡ وَالشَّيٰطِيۡنَ ثُمَّ لَنُحۡضِرَنَّهُمۡ حَوۡلَ جَهَنَّمَ
جِثِيًّا ﴿۶۸﴾ ثُمَّ لَنَنۡزِعَنَّ مِنۡ كُلِّ شِيۡعَةٍ اَيُّهُمۡ اَشَدُّ عَلَى الرَّحۡمٰنِ
عِتِيًّا ﴿۶۹﴾ ثُمَّ لَنَحۡنُ اَعۡلَمُ بِالَّذِيۡنَ هُمۡ اَوۡلٰى بِهَا صِلِيًّا ﴿۷۰﴾ وَاِنۡ
مِّنۡكُمۡ اِلَّا وَارِدُهَا ۚ كَانَ عَلٰى رَبِّكَ حَتۡمًا مَّقۡضِيًّا ﴿۷۱﴾ ثُمَّ نُنَجِّى
الَّذِيۡنَ اتَّقَوْا وَّنَذَرُ الظّٰلِمِيۡنَ فِيۡهَا جِثِيًّا ﴿۷۲﴾ وَاِذَا تُتۡلٰى عَلَيۡهِمۡ
اٰيٰتُنَا بَيِّنٰتٍ قَالَ الَّذِيۡنَ كَفَرُوۡا لِلَّذِيۡنَ اٰمَنُوۡۤا ۙ اَىُّ الۡفَرِيۡقَيۡنِ
خَيۡرٌ مَّقَامًا وَّاَحۡسَنُ نَدِيًّا ﴿۷۳﴾ وَكَمۡ اَهۡلَكۡنَا قَبۡلَهُمۡ مِّنۡ قَرۡنٍ هُمۡ
اَحۡسَنُ اَثَاثًا وَّرِءۡيًا ﴿۷۴﴾ قُلۡ مَنۡ كَانَ فِى الضَّلٰلَةِ فَلۡيَمۡدُدۡ لَهُ
الرَّحۡمٰنُ مَدًّا ۚ حَتّٰٓى اِذَا رَاَوۡا مَا يُوۡعَدُوۡنَ اِمَّا الۡعَذَابَ وَاِمَّا
السَّاعَةَ ؕ فَسَيَعۡلَمُوۡنَ مَنۡ هُوَ شَرٌّ مَّكَانًا وَّاَضۡعَفُ جُنۡدًا ﴿۷۵﴾

64. மேலும், (ஜிப்ரீலானவர், நபியிடம்) உமதிரட்சகனின் கட்டளையைக் கொண்டல்லாது நாம் இறங்குவதில்லை; எங்களுக்கு முன்னிருப்பவைகளும், பின்னிருப்பவைகளும், இவ்விரண்டிற்கு மத்தியிலிருப்பவைகளும் அவனுக்குச் சொந்தமானவைகளாக இருக்கின்றன; மேலும், (இதில் யாதொன்றையும்) உமதிரட்சகன் மறப்பவனாக இல்லை(என்று கூறினார்).

65. வானங்களுக்கும், பூமிக்கும் அவை இரண்டிற்கு மத்தியிலுள்ளவைகளுக்கும் (அவனே) இரட்சகனாவான்; ஆதலால் அ(வன் ஒரு)வனையே நீர் வணங்குவீராக! அவனை வணங்குவதில் (உமக்கு எற்படும் கஷ்டங்களையும்) நீர் பொறுத்துக்கொள்வீராக; (பெயரில், வல்லமையில் மற்றும் அனைத்துப் பண்புகளில்) அவனுக்கு ஒப்பானவனை நீர் அறிவீரா? (இவற்றில் ஒப்பானவர் அவனுக்கு நிகராக எவருமே இல்லை)

66. (இவ்வாறிருக்க) "மனிதன் நான் இறந்துவிட்டால், பின்னர் உயிருள்ளவனாக வெளியாக்கப்படுவேனா?" என்று கேட்கிறான்.

67. (அதற்கு) "முன்னர் யாதொரு பொருளாகவும் இல்லாதிருக்க, நாம் தான் அவனைப் படைத்தோம் என்பதை மனிதன் நினைத்துப்பார்க்க வேண்டாமா?"

68. ஆகவே (நபியே!) உமதிரட்சகன் மீது சத்தியமாக! நாம் அவர்களையும் (அவர்கள் வணங்கிக் கொண்டிருக்கிற) ஷைத்தான்களையும் நிச்சயமாக (உயிர் கொடுத்து) ஒன்று திரட்டுவோம்; பின்னர் நரகத்தைச் சூழ முழந்தாளிட்டவர்களாக அவர்களை நாம் நிச்சயமாக முன்னிலைப் படுத்துவோம்.

69. பின்னர், ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் அவர்களில் எவர் ரஹ்மானுக்கு மாறுசெய்வதில் மிகக்கடினமானவரோ அவரை நிச்சயமாக நாம் (பிரித்து) கழற்றி எடுத்துவிடுவோம்.

70. பின்னர், அ(ந்நரகத்)தில் நுழைவதற்கு எவர்கள் மிகத் தகுதியுடையோரோ, அவர்களை நிச்சயமாக நாம் அறிவோம்.

71. இன்னும், உங்களில் எவரும் (ஸிராத் எனும் பாலமான) அதற்கு வரக்கூடியவராகவேயல்லாது இல்லை; உமது இரட்சகன் மீது இது கட்டாயமான முடிவு செய்யப்பட்டதாக ஆகிவிட்டது.

72. (அவ்வாறுவந்ததன்) பின்னர் பயபக்தியுடையோராக இருந்தார்களே அவர்களை நாம் ஈடேற்றுவோம்; அநியாயக்காரர்களை முழந்தாளிட்ட வர்களாக அதில் விட்டும்விடுவோம்.

73. மேலும், அவர்கள் மீது நம்முடைய வசனங்கள் தெளிவானவையாக ஓதப்பட்டால், விசுவாசிகளிடம் நிராகரிப்பவர்கள், நம் இரு வகுப்பாரில் தங்குமிடத்தால் மிகச் சிறந்தவர் யார், இன்னும் சபையால் மிக்க அழகானவர் யார்? என்று கூறுகின்றனர்.

74. இன்னும், அவர்களுக்கு முன்னர் நாம் எத்தனையோ கூட்டத்தாரை அழித்திருக்கின்றோம்; அவர்கள் தளவாடங்களாலும், தோற்றத்தாலும் மிக அழகானவர்கள்(ஆவர்).

75. "எவர் வழிகேட்டிலிருக்கிறாரோ அவருக்கு அர்ரஹ்மான் கால அவகாசத்தை நீட்டிவிடுகிறான்; முடிவாக அவர்கள் வாக்களிக்கப்பட்டதை _(அதாவது) ஒன்று: இம்மையில் வேதனையை, மற்றொன்று: மறுமையை அவர்கள் கண்டுவிட்டால்_ அப்போது இடத்தால் கெட்டவர் யார்? படையால் மிகவும் பலவீனமானவர் யார்? என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள்" (என்று நபியே!) நீர் (அவர்களுக்குக்) கூறுவீராக!

وَيَزِيْدُ اللّٰهُ الَّذِيْنَ اهْتَدَوْا هُدًى ۭ وَالْبٰقِيٰتُ الصّٰلِحٰتُ
خَيْرٌ عِنْدَ رَبِّكَ ثَوَابًا وَّخَيْرٌ مَّرَدًّا ﴿٧٦﴾ اَفَرَءَيْتَ الَّذِيْ كَفَرَ
بِاٰيٰتِنَا وَقَالَ لَاُوْتَيَنَّ مَالًا وَّوَلَدًا ﴿٧٧﴾ ۭ اَطَّلَعَ الْغَيْبَ اَمِ اتَّخَذَ
عِنْدَ الرَّحْمٰنِ عَهْدًا ﴿٧٨﴾ ۙ كَلَّا ۭ سَنَكْتُبُ مَا يَقُوْلُ وَنَمُدُّ لَهٗ مِنَ
الْعَذَابِ مَدًّا ﴿٧٩﴾ ۙ وَّنَرِثُهٗ مَا يَقُوْلُ وَيَاْتِيْنَا فَرْدًا ﴿٨٠﴾ وَاتَّخَذُوْا
مِنْ دُوْنِ اللّٰهِ اٰلِهَةً لِّيَكُوْنُوْا لَهُمْ عِزًّا ﴿٨١﴾ ۙ كَلَّا ۭ سَيَكْفُرُوْنَ
بِعِبَادَتِهِمْ وَيَكُوْنُوْنَ عَلَيْهِمْ ضِدًّا ﴿٨٢﴾ ع اَلَمْ تَرَ اَنَّآ اَرْسَلْنَا الشَّيٰطِيْنَ ع ٥
عَلَى الْكٰفِرِيْنَ تَؤُزُّهُمْ اَزًّا ﴿٨٣﴾ ۙ فَلَا تَعْجَلْ عَلَيْهِمْ ۭ اِنَّمَا نَعُدُّ لَهُمْ عَدًّا ﴿٨٤﴾ ۚ
يَوْمَ نَحْشُرُ الْمُتَّقِيْنَ اِلَى الرَّحْمٰنِ وَفْدًا ﴿٨٥﴾ ۙ وَّنَسُوْقُ الْمُجْرِمِيْنَ
اِلٰى جَهَنَّمَ وِرْدًا ﴿٨٦﴾ لَا يَمْلِكُوْنَ الشَّفَاعَةَ اِلَّا مَنِ اتَّخَذَ عِنْدَ وقف لازم
الرَّحْمٰنِ عَهْدًا ﴿٨٧﴾ وَقَالُوا اتَّخَذَ الرَّحْمٰنُ وَلَدًا ﴿٨٨﴾ ۭ لَقَدْ جِئْتُمْ شَيْـًٔا وقف لازم
اِدًّا ﴿٨٩﴾ ۙ تَكَادُ السَّمٰوٰتُ يَتَفَطَّرْنَ مِنْهُ وَتَنْشَقُّ الْاَرْضُ وَتَخِرُّ الْجِبَالُ
هَدًّا ﴿٩٠﴾ ۙ اَنْ دَعَوْا لِلرَّحْمٰنِ وَلَدًا ﴿٩١﴾ ۚ وَمَا يَنْۢبَغِيْ لِلرَّحْمٰنِ اَنْ يَّتَّخِذَ وَلَدًا ﴿٩٢﴾ ۭ
اِنْ كُلُّ مَنْ فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ اِلَّآ اٰتِي الرَّحْمٰنِ عَبْدًا ﴿٩٣﴾ ۭ لَقَدْ
اَحْصٰىهُمْ وَعَدَّهُمْ عَدًّا ﴿٩٤﴾ ۭ وَكُلُّهُمْ اٰتِيْهِ يَوْمَ الْقِيٰمَةِ فَرْدًا ﴿٩٥﴾

76. இன்னும், நேர் வழியில் செல்கிறார்களே அத்தகையோருக்கு அல்லாஹ் (மேலும்) நேர் வழியை அதிகப்படுத்துகிறான்; நிலையாக இருக்கக்கூடிய நற்செயல்கள் தாம் உம்முடைய இரட்சகனிடத்தில் நற்கூலியால் மிகச் சிறந்ததாகும்; திரும்பிச் செல்லும் இடத்தாலும் மிகச் சிறந்ததாகும்.

77. (நபியே) நம்முடைய வசனங்களை நிராகரித்தோனை நீர் பார்த்தீரா? அவன் (மறுமையிலும்) நான் நிச்சயமாக செல்வமும், பிள்ளையும் கொடுக்கப்படுவேன் எனவும் கூறினான்.

78. (மறுமையில் அவன் கூறியது போன்றது உண்டா? என்ற) மறைவானதை அவன் அறிந்திருக்கின்றானா? அல்லது அர்ரஹ்மானிடத்தில் அதுபற்றியதொரு உறுதி மொழியைப் பெற்றிருக்கின்றானா?

79. (அவன் கூறுகிற அவ்வாறு) அன்று! அவன் கூறுகின்றவற்றை நாம் எழுதி வருவோம்; (அதற்குத் தக்கவாறு) வேதனையிலிருந்து நாம் அவனுக்கு மிக மிகஅதிகப் படுத்தியும் விடுவோம்.

80. இன்னும், அவன் கூறுகின்றவற்றுக்கு நாமே அனந்தரங் கொண்டு விடுவோம்; (இவைகளை இழந்துவிட்டு) தனியாகவே நம்மிடம் அவன் வருவான்.

81. (இணை வைத்துக்கொண்டிருந்த) இவர்கள், (அல்லாஹ்வின் வேதனை யிலிருந்து காத்து) தங்களுக்கு உதவியாக அவர்கள் ஆவதற்காக அல்லாஹ்வை யன்றி வேறு தெய்வங்களை எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

82. அவ்வாறன்று! தங்களை இவர்கள் வணங்கியதையும் (அத்தெய்வங்கள்) நிராகரிப்பார்கள்; இவர்களுக்கு விரோதமாகவும் அவர்கள் ஆகிவிடுவர்.

83. (நபியே!) நிராகரிப்போரை (தீயவைகளைச் செய்யுமாறு) தூண்டிக் கொண்டிருப்பதற்காகவே ஷைத்தான்களை நாம் (அவர்களிடம்) அனுப்பி யிருக்கிறோம் என்பதை நீர் பார்க்கவில்லையா?

84. ஆதலால், அவர்களுக்காக நீர் அவசரப்படாதீர்; அவர்களுக்காக (வேதனை ஏற்படக்கூடிய நாட்களை) எண்ணிக்கையால் நாம் கணித்துக் கொண்டேயிருக்கிறோம்.

85. பயபக்தியுடையவர்களை அர்ரஹ்மானிடம், கண்ணியமிக்க (விருந்தினர்) குழுவாக நாம் ஒன்று திரட்டும் நாளில்_

86. மேலும், குற்றவாளிகளைத் தாகித்தவர்களாக நரகத்தின்பால்(அந் நாளில்) நாம் ஓட்டிச் செல்வோம்.

87. அர்ரஹ்மானிடம் உறுதிமொழி பெற்றவர்களைத் தவிர எவரும்,(எவருக்கும்) பரிந்துரை செய்ய அதிகாரம் பெறமாட்டார்கள்.

88. இன்னும், (கிறிஸ்தவர்களான) அவர்கள் ரஹ்மான் (தனக்கு) குமாரனை எடுத்துக்கொண்டான் எனக் கூறுகின்றனர்.

89. நிச்சயமாக நீங்கள் பெரியதோர் அபாண்டத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள் (என்று நபியே! அவர்களிடம் நீர் கூறுவீராக!)

90. இ(வ்வாறு நீங்கள் கூறுவ)தனால் வானங்கள் வெடித்துவிடவும், பூமி பிளந்து விடவும்,மலைகள் இடிந்து நொறுங்கி விடவும் நெருங்கிவிடும்.

91. ரஹ்மானுக்கு குமாரன் உண்டென்று அவர்கள் அழைத்ததன் காரணமாக (அவை நிகழக் கூடும்).

92. குமாரனை எடுத்துக்கொள்வது அர்ரஹ்மானுக்கு அவசியமுமல்ல.

93. (ஏனென்றால்,) வானங்களிலும், பூமியிலும் உள்ள (மனிதர்கள், ஜின் இனத்தவர், அமரர்கள் ஆகியோரில்) ஒவ்வொருவரும் அர்ரஹ்மானிடம் அடிமையாக வந்தேயல்லாமல் (வேறு) இல்லை.

94. அவர்களை திட்டமாக அவன்( பூரணமாக) சூழ்ந்தறிந்துள்ளான்; அவர் (களின் எண்ணிக்கை) களை துள்ளியமாக கணக்கிட்டும் வைத்திருக்கிறான்.

95. அவர்களில் ஒவ்வொருவரும் மறுமை நாளில் அவனிடம் தனியாகவே வருவர்.

اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ سَيَجْعَلُ لَهُمُ الرَّحْمٰنُ
وُدًّا ﴿٩٦﴾ فَاِنَّمَا يَسَّرْنٰهُ بِلِسَانِكَ لِتُبَشِّرَ بِهِ الْمُتَّقِيْنَ وَتُنْذِرَ
بِهٖ قَوْمًا لُّدًّا ﴿٩٧﴾ وَكَمْ اَهْلَكْنَا قَبْلَهُمْ مِّنْ قَرْنٍ ؕ هَلْ تُحِسُّ
مِنْهُمْ مِّنْ اَحَدٍ اَوْ تَسْمَعُ لَهُمْ رِكْزًا ﴿٩٨﴾ ع ٦ النصف

## سُوْرَةُ طٰهٰ مَكِّيَّةٌ وَّهِيَ مِائَةٌ وَّخَمْسٌ وَّثَلٰثُوْنَ اٰيَةً وَّثَمٰنُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

طٰهٰ ﴿١﴾ مَاۤ اَنْزَلْنَا عَلَيْكَ الْقُرْاٰنَ لِتَشْقٰۤى ﴿٢﴾ اِلَّا تَذْكِرَةً لِّمَنْ
يَّخْشٰى ﴿٣﴾ تَنْزِيْلًا مِّمَّنْ خَلَقَ الْاَرْضَ وَالسَّمٰوٰتِ الْعُلٰى ؕ ﴿٤﴾
اَلرَّحْمٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوٰى ﴿٥﴾ لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى
الْاَرْضِ وَمَا بَيْنَهُمَا وَمَا تَحْتَ الثَّرٰى ﴿٦﴾ وَاِنْ تَجْهَرْ بِالْقَوْلِ
فَاِنَّهٗ يَعْلَمُ السِّرَّ وَاَخْفٰى ﴿٧﴾ اَللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ؕ لَهُ الْاَسْمَآءُ
الْحُسْنٰى ﴿٨﴾ وَهَلْ اَتٰىكَ حَدِيْثُ مُوْسٰى ﴿٩﴾ اِذْ رَاٰ نَارًا فَقَالَ وقف لازم
لِاَهْلِهِ امْكُثُوْۤا اِنِّىْۤ اٰنَسْتُ نَارًا لَّعَلِّىْۤ اٰتِيْكُمْ مِّنْهَا بِقَبَسٍ اَوْ
اَجِدُ عَلَى النَّارِ هُدًى ﴿١٠﴾ فَلَمَّاۤ اَتٰىهَا نُوْدِىَ يٰمُوْسٰى ؕ ﴿١١﴾ اِنِّىْۤ اَنَا
رَبُّكَ فَاخْلَعْ نَعْلَيْكَ ۚ اِنَّكَ بِالْوَادِ الْمُقَدَّسِ طُوًى ؕ ﴿١٢﴾

96. நிச்சயமாக விசுவாசங் கொண்டு நற்கருமங்களையும் செய்கிறார்களே அத்தகையோர் அவர்களுக்கு (விசுவாசிகளின் இதயங்களில்) நேசத்தையும் அர்ரஹ்மான் நிச்சயமாக ஏற்படுத்திக் கொடுப்பான்.

97. (நபியே!) உம்முடைய மொழியில் நாம் இதை (இறக்கி,) எளிதாக்கி வைத்ததெல்லாம், இதைக் கொண்டு நீர் பயபக்தியுடையவர்களுக்கு நன்மாராயங் கூறுவதற்காகவும், இன்னும், இதனைக் கொண்டு வீண் தர்க்கம் செய்யும் சமூகத்தார்க்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும்தான்.

98. அவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்திருக்கிறோம்; அவர்களில் எவரையேனும் நீர் காண்கின்றீரா? அல்லது அவர்களுடைய இலேசான சப்தத்தையேனும் நீர் கேட்கின்றீரா?

---

அத்தியாயம் : 20

## தாஹா

வசனங்கள் : 135 மக்கீ ருகூஃகள் : 8

---

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. தா ஹா.

2. நீர் சங்கடப்படுவதற்காக (இந்தக்) குர்ஆனை உம்மீது நாம் இறக்கி வைக்கவில்லை.

3. (அல்லாஹ்வாகிய அவனை) பயந்தோருக்கு உபதேசமாகவே அன்றி (இதனை நாம் இறக்கவில்லை).

4. பூமியையும், உயர்ந்த வானங்களையும் படைத்தவனிடமிருந்து (இவ்வேதம்) இறக்கப்பட்டுள்ளது.

5. அர்ரஹ்மான் (தன் கண்ணியத்திற்குத்தக்கவாறும், மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின்மீதிருப்பது அவனுக்கு எவ்வாறு தகுமோ அவ்வாறே) அவன் அர்ஷின் மீது உயர்ந்து (நிலைபெற்று) விட்டான்.

6. வானங்களிலுள்ளவையும், பூமியில் உள்ளவையும், இவ்விரண்டிற்கு மத்தியில் உள்ளவையும், பூமிக்குக் கீழ் (ஈரமான மண்ணுக்கடியில்) உள்ளவையும் அவனுக்கே உரியவையாகும்.

7. (நபியே! உம்) சொல்லை நீர் சப்தமாகக் கூறினாலும், நிச்சயமாக அவன் இரகசியத்தையும் அதைவிட மறைவானதையும் அறிகிறான்.

8. அல்லாஹ்_ அவனைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு நாயன் இல்லை; அவனுக்கு அழகான (பல) பெயர்கள் இருக்கின்றன.

9. இன்னும், (நபியே!) மூஸாவின் செய்தி உம்மிடம் வந்ததா?

10. (தூர் என்னும் மலைமீது) நெருப்பை அவர் கண்டபோது, தன் குடும்பத்தினரிடம், "நீங்கள் (இங்கு சிறிது) தங்குங்கள்; நிச்சயமாக நான் நெருப்பைக் காண்கிறேன்; அதிலிருந்து ஒரு தீப்பந்தத்தை உங்களுக்குக் கொண்டு வரவோ, அல்லது நெருப்பி(ன் வெளிச்சத்தி)னால் வழியை நான் பெறவோ செய்யலாம்" என்றார்.

11. ஆகவே, அவர் அதனிடம் வரவே மூஸாவே! என அவர் அழைக்கப்பட்டார்.

12. "நிச்சயமாக நான் தான் உமதிரட்சகன்; ஆகவே உம்முடைய காலணிகள் இரண்டையும் கழற்றிவிடும்; நிச்சயமாக நீர் "துவா" என்னும் பரிசுத்தமான பள்ளத்தாக்கில் இருக்கிறீர்."